#Eval4Action
youth in evaluation
be a champion!

# இளைஞர் மற்றும் இளைய மதிப்பீட்டாளர்களை அர்த்தமுள்ள வகையில் தொடர்பு படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளுக்கான அழைப்பு

அரசாங்கம், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழில் மதிப்பீட்டிற்கான தன்னார்வ அமைப்புக்கள் (VOPEs), ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள், மதிப்பீட்டாளர்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் அபிவிருத்திப் பிரிவு உள்ளிட்ட உலகளாவிய மதிப்பீட்டு சமூகத்தின் அங்கத்தவர்களான நாம்,

இளைய மற்றும் வளர்ந்துவரும் மதிப்பீட்டாளர்களை உலகளாவிய மதிப்பீட்டு கலாசாரத்தினை உருவாக்க செயற்பாட்டு ரீதியில் பங்களிப்பு வழங்குவதுடன், சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிலைபேறான, உள்ளடக்கத்தில் நியாயமான உலகினை கட்டியெழுப்புவதற்கான மதிப்பீட்டு பரிமாற்றத்தின் பலத்தினைப் பெருக்கும் என்பதனை அறிந்து கொண்டுள்ளோம்.

நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு உதவி புரிதலின் மூலம் மதிப்பீட்டிற்கான செயற்பாடு மற்றும் மதிப்பீட்டு ஆலோசனைகளில் இளைஞர் மற்றும் வளர்ந்துவரும் இளைய மதிப்பீட்டாளர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பிற்கு ஊட்டமளிப்பதோடு உதவிபுரிவதற்குமான எமது கடமையையும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்வதற்கும்:

இளைய மற்றும் வளர்ந்து வரும் மதிப்பீட்டாளர்களின் தொழில்சார் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதற்கு மூலோபயமானதும் கூட்டானதுமான முயற்சிகளை பொறுப்பேற்பதற்கும் அர்ப்பணிப்புச்செய்வதற்கும்:

மதிப்பீட்டினைத் திட்டமிடல், அபிவிருத்திசெய்தல் மற்றும் உபயோகிப்பதற்கும் இளைஞர்களுடன் ஒத்துழைத்து செயலாற்றல் மூலம், இளைஞர்களின் பன்முகத்தன்மையினை கவனத்திற்கொள்ளல், மதிப்பீட்டின்போது இளைஞர்களின் உண்மையான மற்றும் அர்த்தமுள்ள பங்களிப்பிற்காக முன்னிற்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிப்பு செய்தல் வேண்டும். இதற்கு இளைய மற்றும் வளர்ந்துவரும் இளைய மதிப்பீட்டாளர்களை மதிப்பீட்டின் சகல கட்டங்களிலும் தொடர்பு படுத்திக் கொள்வதும் அடங்கும். அவற்றில்:

- **பிரதான தகவல் வழங்குவோர்,** பிரதிநிதித்துவம் குறைந்த இளைஞர் குழுக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, மதிப்பீட்டுத் தரவுகளை சேகரிக்கும்போது முன்னோக்கிய பார்வையையும் சான்றுகளையும் வழங்கல்
- **சக - மதிப்பீட்டாளர்கள்,** சிரேஷ்ட மதிப்பீட்டுக் குழுக்களுடன் மதிப்பீடு செய்வோர்
- **ஆலோசகர்கள்,** மதிப்பீட்டுச் செயற்பாட்டில் பிரதான வழங்கல்கள் தொடர்பில் அவதானிப்பு அறிவிற்கான பங்களிப்பினை மேற்கொள்வோர்.
- **தீர்மானம் மேற்கொள்வோர்,** மதிப்பீட்டுச் செயற்பாட்டின் ஆணையாளர்கள் மற்றும் / அல்லது முகாமையாளர்களுடன் ஒன்றித்து மதிப்பீட்டுச் செயற்பாட்டில் சக – தலைமைத்துவத்தினையும் சக – வழிகாட்டுதலையும் மேற்கொள்வோர்.
- மதிப்பீட்டுப் பாவனைக்கு முன்னிற்போர்

மதிப்பீட்டில் இளைய, மற்றும் வளர்ந்துவரும் இளைய மதிப்பீட்டாளர்களின் அர்த்தமுள்ள தலையீடானது தொடர்ச்சியான செயற்பாடு ஒன்றாகும் எனவும், ஒருமுறை மட்டும் மேற்கொள்ளக்கூடிய முயற்சி அல்ல என்பதனையும் ஏற்றுக்கொள்ளல், இதற்கு செயற்பாடு தொடர்பான பிரதிபலிப்பு மற்றும் நடைமுறைகள் என்பவற்றோடு வேறுபாடுகள் தொடர்பான பாடங்களை உபயோகிப்பது அவசியமாகும்.

மதிப்பீட்டின்போது இளைஞர்களுக்கு ஒரு வீரனாக விளங்குவதற்கு நாம் / நான் அர்ப்பணிப்புடன் இருக்கிறேன்!

**பிரகடனத்தில் கையொப்பமிடுங்கள்**